அநுராதபுர ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான பிரென்ஜ் முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 01 இன் சீஎல்கே-100901 ஆர் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3 பிரிவு மற்றும் 2017 ஆகஸ்ட் 31 இன் கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.4 ஆம் திருத்தப்பட்ட பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தை நிறைவேற்றி அமுல்படுத்துகின்றது. அனுராதபுர நகரத்தின் புனித மற்றும் நவீன பிரதேசங்களுக்கிடையே இணைந்த அபிவிருத்தியின் நடுநிலையான விதத்தினை மேம்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட ஆரம்ப மொத்தக் கிரயம் ரூபா 9,779.95 மில்லியனிற்குச் சமமான யூரோ 62.40 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 8,150 மில்லியனிற்குச் சமமான யூரோ 52 மில்லியன் அபிவிருத்திக்கான பிரென்ஜ் முகவராண்மையினால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 2.1 அபிப்பிராயம்

---------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும், மற்றும்

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்தவேண்டிய ரூபா 359,234 தொகையான மீதி நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏஎவ்டீ | 52.00 | 8,149.96 | 275.00 | Nil | Nil | Nil | Nil |
| இலங்கை அரசாங்கம் | 10.40 | 1,629.99 | 39.00 | 0.33 | 52.01 | 0.44 | 69.56 |
| **மொத்தம்** | **62.40** | **9,779.95** | **314.00** | **0.33** | **52.01** | **0.44** | **69.56** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் வசதி உடன்படிக்கையின் III ஆம் பிரிவு 4 ஆம் பட்டியலின் பிரகாரம், கடன் வசதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 08 மாதங்களுக்குள் முதலாவது மீளளிப்பு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விசேட (யூரோ) கணக்கொன்றினை திறப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்காமையின் விளைவாக, மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 69.56 மில்லியனுக்குச் சமமான யூரோ 443,812 தொகையொன்று மீளளிப்புச்செய்ய முடியாதிருந்தது.

(ஆ) கடன் வசதி உடன்படிக்கையின் பட்டியல் - 03 இன் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் மற்றும் பாதீட்டு செயற்திட்டத்தின் முழுமையான காலப்பகுதியினை மேவுகை செய்யக்கூடிய வகையில் விரிவான

செயல்நடவடிக்கைத் திட்டமொன்று செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக செயலாற்றல்

---------------------------------------

நகர இசைவாக்கத்தின் முன்னேற்றங்கள், பொதுமக்கள் இடைவெளி விரிவாக்கத்தின் மேம்படுத்தல் மற்றும் இயலளவை கட்டியெழுப்புதல், போன்ற 03 மூலக்கூறுகளின் கீழ் அதன் செயற்பாடுகளினை அமுல்படுத்துவதற்கு செயற்திட்டம் திட்டமிடப்பட்டிருந்தது. அனுராதபுர நகர் முன்னேற்றங்களின் விபரமான வடிவமைப்புக்கள் மீதான ஒப்பந்தம் 2017 ஆகஸ்ட் 29 இல் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வேலைகள் 2019 ஏப்ரல் 24 இல் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

செயற்திட்டதினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சிவில் வேலைகள் மீதான விபரமான வடிவமைப்புக்களின் தயாரிப்பிலுள்ள தாமதங்கள் காரணமாக, மீளாய்வாண்டிற்கு செயற்திட்டத்தினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ரூபா 5.97 மில்லியன் கிரயமொன்றில் அலுவலக உபகரணங்களினைக் கொள்வனவு செய்வதற்கு கடைமுறைமையின் கீழ் செயற்திட்டத்தினால் விலைமனுக்கள் அழைக்கப்பட்டிருந்தது. அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 3.4(எவ்) பந்தியின் பிரகாரம் பேணப்படவேண்டிய விலைமனுதாரர்களின் முகவரி பதிவுகளின் பற்றாக்குறை காரணமாக, அவற்றின் மீது பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் உண்மைத்தன்மையினை கணக்காய்வில் தீர்மானிக்க முடியாதிருந்ததுடன் விலை மனு ஆவணங்களைத் திறத்தல் குறித்துரைக்கப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் பேணப்படவில்லை.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 35 பதவிகளினை கொண்டிருந்ததுடன் அவற்றில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 பதவிகள் மாத்திரம் நிரப்பப்பட்டிருந்தது. செயற்திட்ட பணிப்பாளர், மேலதிக செயற்திட்ட பணிப்பாளர், பிரதி செயற்திட்ட பணிப்பாளர், 03 நிபுணர்கள் மற்றும் 07 உதவி பணிப்பாளர்கள் போன்ற செயற்திட்டத்தின் முக்கிய பதவிகள் ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டமையினால், அது செயற்திட்ட நடவடிக்கைகளின் சுமூகமான செயற்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்களவு தாக்கமளித்திருந்தது.

(ஆ) பெறுகை மற்றும் நகர திட்டமிடலுக்கு வேண்டப்படும் தகைமைகள் மற்றும் அனுபவங்களினைக் கொண்டிராத 02 நபர்கள் உதவி செயற்திட்ட பணிப்பாளர்களாக செயற்பட்டிருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.9 ஆம் பந்தியின் பிரகாரம் ஊதியம் தீர்மானிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.